சேலம் மாவட்டம் குமாரபாளையத்திலுள்ள எஸ். எஸ். எம். புராசசிங் யூனிட் நிறுவனத்தில் பணிபுரிந்த தொழிலாளர்கள் உண்ணாநோன்பு இருப்பது குறித்து

1981 மார்ச் 9] [திரு. எஸ். இராகவானந்தம்]

இந்தத் தொழிற் தகராறு மீது சேலம் தொழிலாளர் துறைத் துணை ஆணையர் 6—2—1981 மற்றும் 19—2—1981 தேதிகளில் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இதற்கிடையில் 10—2—1981 முதல் எஸ்.எஸ்.எம். யூனிட்டில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஆரம்பித்தனர். 16—2—1981 அன்று நடந்த பேச்சு வார்த்தைகளில் சேலம் தொழிலாளர் துறைத் துணை ஆணையர் கொடுத்த அறிவுரைப்படி தொழிலாளர்கள் 17—2—1981 முதல் வேலைக்குத் திரும்பினர். இந்த வேலை நிறுத்தத்தைச் சட்ட விரோதமான தாகக் கருதிய நிர்வாகத்தினர் வேலை நிறுத்தம் செய்த ஒவ்வொரு தொழிலாளி யின் சம்பளத்திலும் 8 நாட்களுக்கு உண்டான சம்பளப் பணத்தைப் பிடித்தம் செய்வதாக அறிவித்துள்ளனர். 6—3—1981 முதல் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள 52 தொழிலாளர்களுக்கு வேலை கோரியும் ஊதிய உயர்வு கோரியும் 6—3—1981 முதல் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. 584 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். 104 தொழிலாளர்கள் வேலைக்குச் செல்கின்றனர். சேலம் தொழிலாளர் அலுவலர் இது சார்பாக 9—3—1981 அன்று சமரசப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். ஆகவே உரிய நடவடிக்கை எடுத்துள்ளதால் இதற்காக மேலவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டிய தேவையில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கருதி எனது அனுமதியை மறுக்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3. அறிவிப்புகள்.

(1) பேரவையிலிருந்து செய்திகள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தனிக் குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1981) ஆய்வு செய்வதற்காக 27 உறுப் பினர்கள் அடங்கிய (18 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், 9 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைப்பதற்கு 6—3—1981 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகலை அனுப்பி, மேற்படி கூட்டாய்வுக் குழுவில் பணியாற்று

மாறு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

1. திரு. ஜி. கிருஷ்ணராஜ்
2. திரு. கே. சௌந்தரராசன்
3. திரு. கோவைத் தம்பி
4. திரு. கருப்பசாமி பாண்டியன்
5. திரு. கே. குப்புசாமி
6. திரு. கே. எம். அப்துல் ரசாக்
7. திரு. பாபு கோவிந்தராஜன்
8. திரு. எம். சின்னசாமி
9. திரு. க. பாலசுப்பிரமணியன்
10. திரு. வி. பி. பாலசுப்ரமணியன்
11. திரு. எஸ். ரெத்தினராஜ்
12. திரு. என். வி. என். சோமு
13. திரு. வே. இராஜசேகரன்
14. திரு. டி. மணி
15. திரு. ஆர். தியாகராசன்
16. திரு. கே. தனக்கோடித் தேவர்
17. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்
18. டாக்டர் கே. சௌரிராஜன்

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

1. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1981).

2. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முனவடிவு எண் 24/1981).

3. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1981).

4. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரி களை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1981).

5. 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 27/1981).

6. 1981 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981).

(2) மேலவை உறுப்பினர் திரு. ஆர். டி. சீத்தாபதி சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 7—3—1981 அன்று காவல் துறை ஆணையரிடமிருந்து கீழ்க்கண்ட கடிதம் வரப் பெற்றது.

"திரு. ஆர். டி. சீத்தாபதி. எம். எல் சி அவர்கள் பெருநகர் கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட் முன்பு 7—3—1981 அன்று ஆஜர் படுத்தப்பட்டார். மேற்படி மாஜிஸ்டிரேட் உறுப்பினரை 21—3—1981 வரை மேலும் காவலில் வைக்க ஆணை பிறப்பித்தார். அவ்வுறுப்பினர் 7—3—1981 ஆம் நாளன்று சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டார்".

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(2) திருச்சி சிறையில் அடைக்கப்பட்டுள்ள தி. மு. க. கைதிகளுக்குப் போதிய குடி தண்ணீர்—உணவு போன்றவை கிடைக்காமையால் எழுந் துள்ள நிலைமை குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கர லிங்கம் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றுக்கு முன்னறிவிப்புக் கொடுத் திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்று சுருக்க மாக விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.